# ஒலிநூல் செயற்றிட்டம்

## ஆண்டறிக்கை 2020/2021

| | |
|---|---|
| செயற்றிட்டத் தலைப்பு | ஒலிநூல் செயற்றிட்டம் |
| செயற்றிட்ட எண் | NF/PG/2020/0073 |
| செயற்றிட்ட இடம் | இலங்கை |
| செயற்றிட்டக் காலம் | ஆகஸ்ட் 2020 - டிசம்பர் 2021 |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலக நிறுவனம் |
| புரவலர் அமைப்பு | Dr. செந்தில்குமார், நற்கீரன் லட்சுமிகாந்தன், சுபா பாலசுப்பிரமணியம் |
| முக்கிய பங்குத்தாரர்கள் | வாழ்வகம், நவீல்ட், தரிசனம், ஆசிரியர்கள், தன்னார்வலர்கள் |
| செயற்றிட்டச் செலவுகள் | 2020 - LKR 273,610.58<br>2021 - LKR 405,541.28 |

தமிழ் பேசும் சமூகங்களின் மாற்றுத்திறனாளிகளுக்கு அறிவுத்தளங்களை ஒலிநூற் பதிவு மூலம் ஆவணப்படுத்தி, பாதுகாத்து மக்களிடம் கொண்டு செல்லும் பணியாக இவ் ஒலிநூற் பதிவு வாசிப்பு ஒருங்கிணைத்தல் பணி காணப்படுகிறது செந்தில்குமார், .சுபா பாலசுப்ரமணியம் , மற்றும் நற்கீரன் லட்சுமிகாந்தன் போன்றோரின் மூலம் இப் பணியின் முக்கியதுவத்தைப் பற்றியும் ஒலிப் பதிவு பற்றியும், ஒலிப்பதிவின் தேவை மற்றும் ஒலிப்பதிவு முறையை மேற்கொள்ள பயன்படுத்தும் Audacity என்னும் மென்பொருள் பற்றிய தெளிவும் கிடைக்கப்பெற்றது. ஒலிப்பதிவு செய்வதற்கு முன்பு இவ் ஒலிப்பதிவு பயன்படுத்துபவர் கருத்து, தேவை, ஒலிப்பதிவின் தரம் மற்றும் அவர்களிடமிருந்து பெறப்பட்டு மாற்றுத்திறனாளிகளுக்கான பாடங்களில் ஒலிப்பதிவாக செய்து அவர்களுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டு இச்செயற்றிட்டம் வடிவமைக்கப்பட்டது. இந்த செயற்றிட்டம் தமிழ் பேசும் சமூகங்களின் அறிவுத்தளங்களை எண்ணிம முறையில் ஆவணப்படுத்தி, பாதுகாத்து மக்களிடம் கொண்டு செல்லும் பணியில் ஈடுபட உள்ளார்ந்து ஆர்வம் கொண்ட ஒருவருக்கானது. நூலக நிறுவனம் ஆனது, அதன் வளங்கள் சமூகத்தின் எல்லா வகையான மக்களையும் சென்றடைய வேண்டும் என்பதில் கவனம் கொண்டுள்ளது. அந்த வகையில், கண்பார்வையற்றோர்களுக்கு சேவை வழங்கும் வண்ணம் ஒலி நூற்கள் செயற்திட்டத்தை முன்னெடுத்து வருகிறது. அந்தச் செயற்திட்டம் ஊடாக ஆசிரியர்கள், வாசிப்பவர்களைக் கண்டடைந்து, அவர்களின் வாசிப்பை ஒலிப்பதிவு செய்து, தொகுத்து, வெளியிடும் பணியினை முக்கிய நோக்கமாகக் கொண்டது.

செயற்பாடுகள்

- ஒலிநூற் வாசிப்பை ஒருங்கிணைத்தல்
- சீர்தரங்களுக்கு ஏற்ப ஒலிப் பதிவு செய்தல்

- ஒலிப் பதிவுகளை audacity அல்லது வேறு பொருத்தமான மென்பொருள் கொண்டு தொகுத்தல் (editing)
- ஆவணகத்தில் தேவையான மீதரவுகளுடன் (metadata) பதிவேற்றல்
- நூலகச் செயற்திட்ட அணியோடு சேர்ந்து இயங்கி, செயற்திட்டத்தை வெற்றிகரமாக நகர்த்திச் செல்லல்
- செயற்றிட்ட மற்றும் நிறுவன அறிக்கையிடல் - Reporting போன்ற செயற்பாடுகள் இதனூடாக அடையப்பட்டன. 2020 ஆகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. வாழ்வகம், நவீல்ட் , தரிசனம் ஆகிய இடங்களில் காணப்படும் மாற்றுத்திறனாளி மாணவர்களை மையப்படுத்தி இச்செயற்றிட்டம் முன்னகர்ந்தது.

2020 மொத்தமாக ஒலிப்பதிவு, ஒலித்தொகுப்பு, மீள் ஒலிப்பதிவு, மீள் ஒலித்தொகுப்பு, சரிபார்த்தல், மற்றும் பதிவேற்றல் ஆகிய செயற்பாடுகளை உள்ளடக்கி 107 ஒலிநூல்கள் செய்யப்பட்டன.

| மாதம் | ஒலிப்பதிவு |
|---|---|
| ஆகஸ்ட் | 1 |
| செப்டம்பர் | 9 |
| ஒக்டோபர் | 56 |
| நவம்பர் | 32 |
| டிசம்பர் | 10 |
| மொத்தம் | 107 |

2021 மொத்தமாக ஒலிப்பதிவு, ஒலித்தொகுப்பு, மீள் ஒலிப்பதிவு, மீள் ஒலித்தொகுப்பு, சரிபார்த்தல், மற்றும் பதிவேற்றல் ஆகிய செயற்பாடுகளை உள்ளடக்கி 370 ஒலிநூல்கள் செய்யப்பட்டன.

| மாதம் | ஒலிப்பதிவு |
|---|---|
| ஜனவரி | 13 |
| பெப்ரவரி | 59 |
| மார்ச் | 36 |
| ஏப்ரல் | 30 |
| மே | 56 |
| யூன் | 27 |
| யூலை | 30 |
| ஆகஸ்ட் | 10 |
| செப்டம்பர் | 59 |

| | |
|---|---|
| ஒக்டோபர் | 15 |
| நவம்பர் | 23 |
| டிசம்பர் | 12 |
| மொத்தம் | 370 |

எதிர்கொண்ட சவால்கள்

- இவ்வாண்டில் கோவிட் 19 காரணமாக அதிகமாக அடைவுகள் சார்ந்த விடயங்களை எட்டுவது கடினமாக அமைந்தது. குறிப்பாக பணியாளரே வாசித்து பதிவேற்றம் செய்ய வேண்டியிருந்தமை.
- புதிய அலுவலக இடமாற்றம் ஓர் சவாலான காரணியாக அமைந்தது.
- நூல்களை வாசிப்பதற்கான ஒலிப்பதிவு அறை இன்மையால் வெவ்வேறு இடங்களுக்கு சென்று ஒலிப்பதிவு செய்தமை.
- வாசிப்பதற்கான ஆசிரியர்களை இனங்காணுதல் பெரும் சவாலாகவே இருந்தது.

கற்றல்களும் பரிந்துரைகளும்

- இவ்வாண்டில் கோவிட் 19 காரணமாக அதிகமாக அடைவுகள் சார்ந்த விடயங்களை எட்டுவது கடினமாக அமைந்தது. குறிப்பாக பணியாளரே வாசித்து பதிவேற்றம் செய்ய வேண்டியிருந்தமை. மேலும் வாசிப்பதற்கான தன்னார்வலர்களை நிறுவனத்துள்ளே உருவாக்குதல்
- நூல்களை வாசிப்பதற்கான ஒலிப்பதிவு அறை இன்மையால் வெவ்வேறு இடங்களுக்கு சென்று ஒலிப்பதிவு செய்தமை. தீர்ப்பதற்காக ஓர் இலிப்பதிவு அறையை ய்ருவாக்குதல்
- வாசிப்பதற்கான ஆசிரியர்களை இனங்கண்டு பட்டியலிடல்
- பாடசாலை மட்டத்தினைத்தாண்டி பல்கலைக்கழக ஆவணங்களையும் வாசிப்பதற்கான முன்னர்வுகளை மேற்கொள்ளல்.

பின்னிணைப்புக்கள்

ஒலிநூல்கள்